சர்க்கார் முயற்சி செய்ததா? உபரியாக இருக்கக்கூடிய 'ப்ரோக்கன் ரைஸை' இறக்குமதி செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆந்திர விவசாயிகள் தமிழ் நாட்டிலுள்ள பஞ்சத்தைப் பார்த்து, மனமிரங்கி, நெல், அரிசி, வைக்கோல் ஆகியவைகளைத் தருவதாகச் சொன்னார்கள். அதை மத்திய அரசு மறுத்துவிட்டது. ஆந்திர அரிசியை மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப அவர்கள் தயாராக இருந்தாலும் மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு என்று நிர்ணயித்து, அவர்களுடைய ஃபுட் கார்ப்பரேஷன் மூலம் தருகிறார்கள். அதிலே ஓரளவு நமக்குக் கிடைத்திருக்கிறது.

நாட்டறம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம்

* 156 வினா—**திரு. ஜி. ராமசாமி :**
திரு. டி. சி. திம்மராய கவுண்டர் : } மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டறம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் தொடங்கும் யோசனை அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Spare parts for buses

* 157. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a Centralised Organisation to purchase spare parts and maintain inventory control for all the State Transport Corporations; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.